


# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல
ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக
கொலேசெயர் 3 : 16

மரம் 1 ஆகஸ்ட் 2001 கனி 9

ஆசிரியர்
B. அர்ஜூனன்

*உங்களுக்கு ஓர் அழைப்பு*

## கிறிஸ்துவின் சபையார் குடும்ப கூடுகை

இடம் : வைகை அணை, தேனி மாவட்டம்

தேதி : ஆகஸ்ட் 15, 2001

நேரம் : காலை 10.00 மணி முதல் 2.00 மணி வரை

செய்தி : சகோ. **தானியேல் துரைராஜன்,** *திருச்சி.*
"கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" (2 தீமோ. 3:12)

நோக்கம் : சபையின் வளர்ச்சிக்காக

நடத்துபவர்கள் : மதுரை மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள ஆறு கிறிஸ்துவின் சபைகள்

மேலும் விபரமறிய
**The Word of Christ,**
✆ (04543) 23278

**அனுமதி இலவசம்**

*யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

*வாருங்கள் !* *கேளுங்கள் !!* *ஐக்கியப்படுங்கள் !!!*

**இதழின் உள்ளே . . .** **பக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | எழுதியிருக்கிறபடி | 1 |
| 2. | பொது அறிவுக் களஞ்சியம் | 5 |
| 3. | சிலுவையில் தொங்கிய குற்றவாளி | 6 |
| 4. | தெரிந்து கொள்ளுங்கள் | 9 |
| 5. | ஒரு வழி பாடம் | 10 |
| 6. | சிறுவர் பகுதி | 14 |
| 7. | பெண்கள் பகுதி | 16 |
| 8. | பழைய ஏற்பாட்டு புத்தகங்களுக்கு குறிப்புகள் | 19 |
| 9. | நாமகரண கூட்டத்தின் பாவம் | 20 |


FOR FREE DISTRIBUTION

"Go ye into all the world, and preach the gospel to every creature" mark 16:15


**Published by**
**WORLD LITERATURE PUBLICATIONS**
**Post Box No. 5, Batlagundu - 624 202.**
**SOUTH INDIA.**

திவேர்ட் ஆப் கிரைஸ்ட்


THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் 1 ஆகஸ்ட் 2001 கனி 9

ஆசிரியருரை

# As it is written
# எழுதியிருக்கிறபடி



உலகத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்த புத்தகம் எதுவாகத்தானிருக்க முடியுமென்றால் அது பரிசுத்த வேதமாகத்தானிருக்க முடியும். அதில் எழுதியிருக்கிறபடி நடந்திருக்கிறது. நடந்து கொண்டு இருக்கிறது. இனிமேல் நடக்கவும் போகிறது. இப்படிப்பட்ட கால கட்டங்களின் நிகழ்வுகளை வேறே எந்த புத்தகத்திலும் நாம் காண முடியாது. இது தேவனால் கொடுக்கப்பட்டபடியால் இன்றும் என்றும் தனிச்சிறப்புடன் விளங்கக் கூடியாதாயிருக்கிறது.

அநேகர் கேட்கக் கூடியகேள்வி : இயேசுவை ஏன் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்? நாம் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய கேள்விதான் இது. ஏனென்றால் அவர் பாவம் செய்யவில்லை, கொடுமை செய்யவில்லை. அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை. பின்பு ஏன் அவரை கொலை செய்தார்கள்? இதற்குரிய பதிலை நாம் வேதாகமத்திலே பார்க்கலாம். இயேசுவுக்கு முன்னோடியாக வந்தவன் யோவான் ஸ்நானகன் இவன் இயேசுவைக் கண்டு "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்" (யோவா.1:29). ஆம்! நாம் அறிந்திருக்கிறபடி பாவங்களுக்காக ஆடுபலியிட்டு பாவநிவர்த்தி செய்யப்பட்டது. இவரோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார். அப்படியானால், இவர் ஆடு பலியிடப்படுவதுபோல பலியிடப்படவேண்டும். "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது" (லூக் 24:4)ன் படியும் ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்திலே முன்னே இயேசுவை குறித்து எழுதியிருக்கிறபடியும் அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார், பாவத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள அனைவரையும் மீட்கும்படியாக அவர் மரித்து பின்பு அவருடைய உயிர்தெழுதலில் நாம் இணைக்கப்படும்படியாக அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

இயேசுவின் மேல் கையோட ஒருவருக்கும் அதிகாரமில்லை. அப்படியிருந்த போதிலும் இயேசுவை பிடித்து அடித்து சிலுவையில் அறைந்தார்கள். எழுதியிருக்கிறபடி தேவனாகிய கர்த்தர் இயேசுவை பாடுகளுக்கு ஒப்புக் கொடுத்தார். அன்று இருந்த அரசு, யூதர்களுக்கு ராஜாவாகிய இயேசுவை கொன்றுபோட்டோம் என்று பிரதான ஆசாரியர்களோடு சேர்ந்து களிகூர்ந்தார்கள். தேவனோ, அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து அவரை உயிரோடு எழுப்பி உன்னதங்களிலே அவரோடே கூட உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்தார். இந்த உலகத்தின் இறுதிவரை கிறிஸ்து ராஜாவாகவும், வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராகவுமிருக்கிறார். அவர் தம்முடைய சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த அவருடைய சபையாகிய 'கிறிஸ்துவின் சபையை' இன்றும் போஷித்து பராமரித்து காத்து வருகிறார்.

நேபுகாத்நேச்சார் என்று சொல்லக்கூடிய ஒரு ராஜா எருசலேமை முற்றுகையிட்டு சாலமோன் கட்டினதேவாலயத்திலிருந்த பொன், வெள்ளி பாத்திரங்களை கொள்ளையிட்டு தன் வசமாக்கினான், பின்பு வானத்துக்கும் பூமிக்கும் தேவனானவர் எப்படிப்பட்டவர் என்பதை தானியேல் மூலம் அறிந்து அவன் எழுதினது என்னவென்றால் "நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள், அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்" (தானி 4 : 37). இவனுக்கு பின்பு வந்த இவன் மகன் பெல்ஷாத்சார் என்று சொல்லக்கூடிய ராஜா எழுதியிருக்கிற தன் தகப்பனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாமல் தன் தகப்பனால் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன், வெள்ளி பாத்திரங்களில் தானும், தன் பிரபுக்களும், தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டு, அவைகளில் ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும் அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்து பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள் "அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான் அப்பொழுது ராஜாவின் முகம் வேறுபட்டது. அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணினது. அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது. அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டது". (தானி 5 : 5, 6) எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால், மெனே, மெனே, தெக்கேல் உப்பார்சின் என்பதே இதனுடைய விளக்கத்தை ஞானிகளாலும், ஜோசியராலும், குறிசொல்லு கிறவர்களாலும் சொல்லக்கூடாதிருக்கும் போது தானியேல் என்ற தேவ மனிதன் அதற்குரிய விளக்கத்தை தெரியப்படுத்தினான். தேவன் உன்

ராஜ்யத்தை மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார். நீ குறையக் காணப்பட்டாய் என்றான். அன்று இராத்திரியிலே ராஜ்யாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான்.

"என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக் கொள்" (நீதி 6 : 20) என்ற வசனப்படி எழுதப்பட்டுள்ள நம் முற்பிதாக்களின் நடபடிகளை காத்துக்கொள்ள வேண்டும். ஆனால் தன் தகப்பனாகிய நேபுகாத்நேச்சாரால் எழுதப்பட்டுள்ள வார்த்தைகளை பெல்ஷாத்சாரோ ஏற்காமல் தன் இஷ்டப்படி நடந்தான். தேவனுடைய வார்த்தையை ஏற்காமல் இஸ்ரவேல் மக்களை சபிக்க சென்ற மதிகெட்ட பிலேயாம் தீர்க்கதரிசியை தடுக்க கர்த்தர் பேசாத மிருகத்தின் வாயை திறந்தார். அதுபோல தன் தகப்பனால் எழுதப்பட்டுள்ள தேவனுடைய மகத்துவங்களை ஏற்காத பெல்ஷாத் சாரின் செயலை கண்டித்து கர்த்தர் சாந்து பூசப்பட்ட சுவரில் கைவிரல்கள் தோன்றி அவன் பார்க்க எழுதும்படி கட்டளையிட்டார்.

இதை வாசிக்கும் என் அன்பு சகோதரனே சகோதரியே பரிசுத்தவேதம் எதற்காக எழுதப்பட்டுள்ளது என்றால் நீ உன் தேவனாகிய கர்த்தரை அறிந்து கொள்ளும்படியாக "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது" (யோவா 20 : 31) நீங்கள் அவரை விசுவாசித்து பற்றிக் கொள்ளும் போது என்றுமே அழியாத நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வீர்கள். ஒருவேளை நீங்கள் இதை அறிந்தும் அறியாதவர்கள் போல மெத்தனமாக இருப்பீர்கள் என்றால் கர்த்தர் கூறும் வசனத்தை வாசியுங்கள் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றியிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12 : 48) ஆண்டவரையும் அவர் மூலமாக சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகளை புறம்பே தள்ளும்போது நீங்களும் நியாயந்தீர்க்கப்பட்டு புறம்பே தள்ளப்படுவீர்கள்.

இஸ்ரவேல் மக்களை நாற்பது வருடம் வனாந்திரத்திலே வழிநடத்தின மோசேமூலமாக கர்த்தர் பேசும் போது "என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும். என் சத்தத்துக்கு செவிகொடாமல், இதனோடே பத்து முறை என்னைப் பரீட்சை பார்த்த மனதரில் ஒருவரும் அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்" (எண். 14 : 22) என்றார். ஒரு முறையா, இரண்டு முறையா ஒன்பது முறை இஸ்ரவேலர் தேவனை பரீட்சை பார்த்திருந்தும் அவர்களை மன்னித்திருக்கிறார். அதற்கு மேலும் அவர்கள் பாவம் செய்ய இடங்கொடாமல் கானானுக்குள் பிரவேசிக்க அனுமதியாமல் அவர்களை அழித்துப் போட்டார். நமக்கும்

இப்பூமியில் மனந்திரும்புவதற்கான சந்தர்ப்பத்தை தேவன் கூட்டிக் கொடுத்து வருகிறார். இனிமேலும் காலம் கடத்தாமல் எழுதப்பட்டுள்ள எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுங்கள். வேதாகமம் இஸ்ரவேல் மக்களைப் போல நாமும் அழிந்து போகாமல் காக்கப்படும்படியாக எழுதப்பட்டுள்ளது. "அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" (2தீமோ 3 : 17). நம்முடைய பிரயோஜனத்துக்காகவே வேதம் எழுதப்பட்டுள்ளதை இவ்வசனத் திலிருந்து நாம் தெரிந்து கொள்கின்றோம். சாலை ஓரங்களில் சில வாசகங்கள் எழுதப்பட்டுள்ளதை பார்த்திருப்பீர்கள். Go, slow, Keep left., போன்ற வாசகங்களால் ஓட்டுநர் எச்சரிக்கப்படுகிறார். இது ஓட்டுநருக்கும் செல்லக்கூடிய பயணிகளுக்கும் பிரயோஜனமாக இருக்கிறது, ஒருவர் இதை மீறி செயல்படுவாரானால் என்னவாகும் நிச்சயமாக விபத்துக்குள்ளாவார். அதுபோல் வேதாகமம் பாவத்தை சுட்டிகாட்டுகிறது, அதிலிருந்து விடுதலையடையக்கூடிய வழியையும் நமக்கு போதிக்கிறது. "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" (யோவா 8 : 32).

"தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங் கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது; மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச்செய்து வருகிறார்" (பிர. 3 : 14). வேதா கமத்தில் உள்ள ஒரு வார்த்தையை கூட்டவோ அல்லது குறைக்கவோ ஒருவருக்கும் அதிகாரமில்லை சொல்லப்பட்டுள்ள அணைத்து வார்த்தைகளும் தேவனால் கொடுக்கப்பட்டவையே. அவைகளுக்குரிய கனத்தையும் மரியாதையையும் நாம் கொடுக்க வேண்டும். பாருங்கள், வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவையும் தேவன் தம்முடைய விருப்பத்தின்படி சிருஷ்டித்திருக்கிறார். அவைகளை மாற்றியமைக்க ஒருவரால் முடியுமா? நிச்சயமாக முடியாது அப்படி மாற்றியமைக்க முடியாத நாம், வேத வசனங்களை மாற்றியமைக்க முயற்சிக்கலாமா? கூடாது. "அபத்தமானதைத் தரிசித்து, பொய்க் குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை விரோதமாயிருக்கும், அவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை" (எசே. 13 : 9) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

எழுதப்பட்டிருக்கிறபடி ஒரு நாள் கிறிஸ்துவானவர் வருவார். அவர் வருகைக்கு முன் நாம் சிந்திக்கவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. அவர் வருகையில் நாம் அவரோடு கூட எடுத்துக் கொள்ளப்படுவோமா? அல்லது கைவிடப்படுவோமா? அவரை ஏற்றுக் கொள்ளாதவர்கள் அவரோடு கூட நித்தியத்துக்கு செல்ல முடியாது. தேவனை அறியாதவர்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களும் "கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய

*மகிமையிலிருந்தும் நீங்கலாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2 தெச 1 : 10) என எழுதப்பட்டுள்ளது. மேலும் "ஜீவ புஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்" (வெளி. 20 : 15). இனிமேல் சம்பவிக்கிப்போகிற காரியங்களை வேதாகமம் நமக்கு படம் பிடித்துக் காண்பிக்கிறது. ஆகையால் பிரியமான சகோதரனே சகோதரியே நீ எப்படி உள்ளாய்? உன் நிலைமை என்னவாகும்? சற்று சிந்தித்துப் பார்! கொடுக்கப்பட்டுள்ள இந்த நாட்களை பயன்படுத்தி உன் பெயர் ஜீவபுஸ்தகத்தில் இடம் பெற பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறபடியே உனக்காக மரித்து அடக்கப் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படு அப்பொழுது அவர் மீண்டும் வரும்போது அவரோடுகூட நித்தியத்துக்குள் போகும் பாக்கியத்தை பெறுவாய். "இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், காலம் சமீபமாயிருக்கிறது" (வெளி 1 : 3).*

எழுதியிருக்கிற தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளாதோர் ஏராளம், ஏராளம். ஆகையால் அழிந்து போனார்கள் பாதாளத்தில் நீங்களும் அப்படியே போகாதிருக்க எழுதியிருக்கிற தேவனுடைய வார்த்தைகளை படியுங்கள் தாராளமாக.!

## பொது அறிவுக் களஞ்சியம்

### மதசார்பற்ற அரசு – Secular Government


**இந்திய அரசு எந்த ஒரு தனிப்பட்ட சமயத்தையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல, அதனால் இது மதசார்பற்ற அரசாக விளங்குகிறது. அரசு எந்த சமயத்தின் கோட்பாடுகள் மற்றும் கருத்துக்களில் தலையிடாது.**

**இந்துக்கள், முஸ்லீம்கள், கிறிஸ்தவர்கள், பார்சிகள், சமணர்கள், பௌத்தர்கள் என்று பல்வேறு சமயத்தவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்க உரிமை தரப்பட்டுள்ளது. மக்கள் தங்கள் சமயக் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், பிரச்சாரம் செய்யவும் வளர்க்கவும் உரிமையளிக்கப்பட்டுள்ளது. எனினும் இச்செயல்கள் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றைப் பாதிக்காத வகையிலும், பிற சமயத்தவர்களின் உணர்வுகளைப் பாதிக்காத வகையிலும் பொது சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்காத வகையிலும் இருக்க வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.**

# சிலுவையில் தொங்கிய குற்றவாளி

# THE THIEF ON THE CROSS

J.C. Choate



இரட்சிக்கப்பட ஒருவன் திருமுழுக்கு அவசியம் பெற்றாக வேண்டும் என சுவிசேஷம் மிக தெளிவாகவும் மீண்டும் மீண்டுமாகவும் கற்பிக்கிறது. ஒருவன் இரட்சிக்கப்பட **விசுவாசித்து திருமுழுக்கு** பெற வேண்டும் (மாற்கு 16 : 16) என கிறிஸ்துவே கூறினார். பேதுரு சொல்லும் போது, **பாவங்கள் மன்னிக்கப்பட மனந்திரும்பி திருமுழுக்கு** பெற வேண்டியது அவசியம் என்றார் (அப்போஸ்தலர் 2 : 38) நோவாவும் அவனது குடும்பத்தாரும் தண்ணீரால் இரட்சிக்கப்பட்டது போல, **திருமுழுக்கு இரட்சிக்கிறது** என 1 பேதுரு 3 : 21 இல் பேதுரு பரிசுத்த ஆவியால் ஏவப்பட்டு எழுதினார். **திருமுழுக்கு** ஒருவனை **கிறிஸ்துவுக்குள்ளாக்குவதுடன்** (கலா 3 : 26, 27) **சபைக்குள்ளும்** கொண்டு வருகிறது (1 கொரிந்தியர் 12 : 13) என தேவனின் வார்த்தை நமக்கு கூறுகிறது. ஒருவன் திருமுழுக்கில் **தண்ணீராலும், ஆவியாலும்** பிறப்பதால் **புதிய பிறப்பு** எனப்படுகிறது (யோவான் 3 : 5). மேற்சொன்ன வசனங்களின் வெளிச்சத்தில், திருமுழுக்கு பெறாமல் ஒரு மனிதன் இரட்சிப்படைய முடியும் என எப்படி ஒருவர் கூற முடியும்? ஆனாலும் இதைத்தான் பலர் செய்துகொண்டு இருக்கின்றனர்!

சிலுவையில் தொங்கிய குற்றவாளி திருமுழுக்கு இன்றி இரட்சிக்கப்பட்டான் என்று நாமகரண சபைகளில் பலர் உபதேசிக்கின்றனர். பதிவேடு கூறுகிறது. "அன்றியும் சிலுவையில் அறைப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன் நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி : நீ இந்த ஆக்கினைக்கு உட்பட்டவனாயிருந்தும் தேவனுக்கு பயப்படுகிறதில்லையா நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்; நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம்; இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்து கொண்டு, இயேசுவை நோக்கி : ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி : இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய், என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார்" (லூக்கா 23 : 39-43).

சிலுவையில் தொங்கிய குற்றவாளி திருமுழுக்குப் பெற்றிருந்ததைப் பற்றி எதுவும் கூறப்படாவிட்டாலும், அவன் நிச்சயமாகவே திருமுழுக்குப் பெற்றிருக்க கூடும். மாற்கு நமக்குச் சொல்லுகிறார் : "யோவான் வனாந்தரத்தில் ஞானஸ்நானம் கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனந்திரும்புதற்கேற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தான். அப்பொழுது **யூதேயா தேசத்தார் அனைவரும் எருசலேம் நகரத்தார் யாவரும்** அவனிடத்திற்குப் போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் **அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்** *(மாற்கு 1 : 4,5).*

எனவே அந்த திருடன் திருமுழுக்குப் பெற்றிருந்தான் என்றும் அதன் பின்னர் திருட்டுத்தொழிலில் ஈடுபட்டு சிலுவையில் அறையப்படும் வரை வந்துவிட்டான் என ஒருவர் நன்றாகவே அனுமானிக்ககூடும். மனந்திரும்பிய பின் பாவத்தில் விழுவது ஒருவனுக்கு இது முதல் தடவையாகவோ அல்லது கடைசி தடவையாகவோ இருக்காது.

மேலும் கவனிப்போம். இந்த குற்றவாளி இயேசுவைப் பற்றி நிறைய தெரிந்திருந்தான் என்பதும் அவரில் மிகப்பெரிய விசுவாசம் வைத்திருந்தான் என்பதும் தெளிவு! இதெல்லாம் உங்களுக்கு எப்படி தெரியும் என நீங்கள் கேட்கலாம். அவனுடைய சொந்த வார்த்தைகளிலிருந்துதான்! அங்கே சிலுவையின் மரண அவஸ்தையில் மூன்று பேர் தொங்கி கொண்டிருந்தனர். இயேசுவின் காலடியில் மூன்று ஆண்டுகள் கற்றுக்கொண்ட அவருடைய சீடர்கள், பயத்தில் அவரைப் பரிதவிக்க விட்டு விட்டு பறந்து போய்விட்டனர். அவர் மேல் வைத்த விசுவாசம் அங்கே ஆடிக்கொண்டிருந்தது. ஆனால் அந்த குற்றவாளி என்ன சொல்லுகிறான்? "ஆண்டவரே! ............ இயேசுவின் ஆவிக்குரிய இராஜ்யத்தைப் பற்றி அவன் போதுமானபடி அறிந்தவனாக இருந்தபடியால் அவரை நோக்கி வேண்டுகிறான், "நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும்!" என்றான். இயேசுவின் மரணம் அவருடைய முடிவாக இருக்காது அல்லது அவருடைய இராஜ்யத்தில் அவர் அரசராக வருவதை அது தடுக்காது என குற்றவாளி எவ்வாறு அறிந்தான். ஆம், நமது கர்த்தரைப்பற்றி அந்த குற்றவாளி நிறைய அறிந்திருந்தான். அவருடைய உபதேசங்களுக்கு அவன் அன்னியன் அல்ல, அநேகமாக அவன் திருமுழுக்குப் பெற்றிருக்க வேண்டும்.

ஒருவேளை அவன் திருமுழுக்கு பெறவில்லை என்று வைத்துக்கொள்வோம். அது எந்தக் காரியத்தையும் நிருபிக்கவில்லை. இன்று ஒருவன் திருமுழுக்கு பெறாமல் இரட்சிப்படைய கூடும் என்பதை நிச்சயமாக இது நிரூபிக்கவில்லை நாம் வாழும் இன்றைய நாட்களுக்கு முற்றிலும் மாறான **வேறொரு காலத்திலும்**, ஒரு **வேறுபாடான சட்டத்தின் கீழும்** அந்த குற்றவாளி வாழ்ந்தான். அந்நாட்களில் கிறிஸ்து இன்னும் உயிரோடு இருந்தார். ஒரு மனிதனை மன்னிக்கவும் வரும்

இராஜ்யத்தில் அவனை இரட்சித்து சேர்த்துக்கொள்ள வாக்களிக்கவும் நிச்சயமாக அவருக்கு உரிமை இருந்தது. ஆனால் இயேசுவின் சிலுவை மரணத்திற்கு பின், புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியது போல கிறிஸ்துவின் சட்டம் என்ற ஒரு புது சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்புக்குப் பின் நாம் அந்த சட்டத்தின் கீழ்தான் வாழ்ந்து கொண்டு வருகிறோம். கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பு அமுலில் இருந்த அந்த சட்டத்திற்கு திரும்பி சென்று, அதற்கு கீழ்படிந்து, இரட்சிப்பை எதிர்பார்க்க முடியாது. நம் சவுகரியத்திற்கு ஏற்ப சட்டங்களை மாற்ற இயலாது.

உண்மை என்னவென்றால் **நம் சுவிசேஷத்தை எடுத்து கொண்டு அதிலுள்ள ஒரு கட்டளைக்கு ஈடுசெய்யும் விதத்தில் வேறு ஒரு கட்டளையைப் பின்பற்றுவது சரிதான் என முயற்சிப்பது தான் தவறாகும்.** இரட்சிப்படைய சில கட்டளைகளுக்கு கீழ்படிய வேண்டும் எனக் கர்த்தர் நமக்குச் சொல்லும் போது நாமோ சுவிசேஷத்தை புரட்டிப் பார்த்து, கர்த்தரின் கட்டளையை பின்பற்றாமல் யாராவது இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களா என ஒரு உதாரணத்தை கண்டுபிடிப்பதும், நமது "கண்டுபிடிப்பின்" காரணமாக கிறிஸ்துவுக்கு கீழ்படிவது அவசியம் அல்லவென்று அவரை தள்ளி விடுவதும் சரியான செயல் அல்ல.

இக்கட்டுரையின் முற்பகுதியில் கூறப்பட்டது போல ஒருவன் இரட்சிக்கப்பட திருமுழுக்கு பெறவேண்டும் என வேதாகமம் தெளிவாக கற்பிக்கிறது. அதே சமயம், "திருமுழுக்கு மட்டுமே" இரட்சிக்கிறது என தேவனின் வார்த்தை எங்கும் கூறவில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். "விசுவாசத்தினால் மட்டும்" அல்லது "மனந்திருப்புதால் மட்டும்" அல்லது "கிறிஸ்துவை அறிக்கை செய்வதினால் மட்டும்" ஒருவன் இரட்சிப்படைய முடியும் என சுவிசேஷம் எங்கும் கற்பிக்கவில்லை. மாறாக, கட்டளையாகவும் மனந்திரும்புதலின் உதாரணங்களாகவும் அப்போஸ்தல நடபடி புத்தகம் தேவனுடைய வார்த்தை என்ன சொல்லுகிறது எனப் பாருங்கள் : ஒருவன் (வசனத்தை) **கேட்டு**, கிறிஸ்துவின் நற்செய்தியை **விசுவாசித்து**, ஒருவனுடைய பாவங்களுக்காக **மனஸ்தாபப்பட்டு**, கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என **அறிக்கையிட்டு** பாவங்கள் மன்னிக்கப்பட திருமுழுக்கு பெறவேண்டும். ரோமர் 10 : 17, எபிரேயர் 11 : 6, அப். 17 : 30, ரோமர் 10 : 10, மாற்கு 16 : 16 ஆகிய வசனங்களைப் படியுங்கள்.

இப்போது நாம் "தண்ணீர் இரட்சிப்பு" பற்றி பேசிக்கொண்டிருக்கவில்லை. ஆனால் இரட்சிப்படைய அவர் நியமித்துள்ள திட்டங்களையும், நிபந்தனைகளையும் நாம் நிறைவேற்றும் போது கர்த்தர் அளிக்கும் இரட்சிப்பைப் பற்றி நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்து நமது இரட்சகர், அவர் நம்மை இரட்சிக்கப்போவதாக இருப்பின், நாம் என்ன செய்ய வேண்டும் என நமக்குச் சொல்ல அவருக்கு எல்லா உரிமைகளும் உள்ளன. தண்ணீர் அடக்கத்திலிருந்து கிறிஸ்துவில் ஒரு புது ஜீவனாக உயிர்க்கும் போதும்

இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை படம்பிடித்துக் காட்டுகிறோம் (ரோமர் 6). கர்த்தர் தாமே கொடுத்த இரட்சிப்பின் ஒரு கட்டளையை தொலைந்து போனதிலிருந்து திருடும் ஒரு திருடனாக நீங்கள் இருக்க வேண்டாம்.

**தமிழில் : எஸ்.எஸ். ராஜன்**

## தெரிந்து கொள்ளுங்கள்

### இன்று புதிய வெளிப்பாடு உண்டா?

இன்றைக்கு மக்கள் தேவ ஆவியின் ஏவுதலை பெறுகிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தேவன் தம்முடைய குமாரன் மூலமாக அளிக்கும் ஜீவன் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றைக் குறித்து மனிதர்களுக்கு வெளிப்படுத்தக்கூடிய அனைத்தையும் அவர் முழுமையாக வெளிப்படுத்தி விட்டார். இரட்சிப்பைக் குறித்த தேவனுடைய வெளிப்பாடு முழுமை பெற்று விட்டது. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வேதாகமம் முழுமையானதாக இருக்கிறது. இனி தேவனிடத்திலிருந்து 'புதிய வெளிப்பாடு' ஒன்றுமில்லை (எபி. 1 : 1-3), 2:1-4, வெளி. 22 : 18, 19, கலா. 3 : 15) 2 பேது. 1 : 21, சகரி. 7 : 12.

"வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது" ( 2 தீமோ 3 : 16) By inspiration of God கிரேக்க மொழியில் .(God breathed) என்று படிக்கின்றோம்.

இன்று தேவனிடத்திலிருந்து தாங்கள் ஒரு புதிய வெளிப்பாட்டைப் பெற்றுக் கொண்டதாக மக்கள் கூறுவார்களென்றால், அதற்கு இரண்டு சாத்தியக் கூறுகள் உண்டு. (1) அவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்டிருக்கிறார்கள். (ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட சத்தயத்தை புதிதாகப் புரிந்து கொள்ளுதல்) அல்லது (2) தேவனுடைய பரிசுத்த ஆவியல்லாத வேறொரு ஆவியால் அவர்கள் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மற்றவர்களை குற்றப்படுத்த இதை சொல்லவில்லை "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறிய வேண்டும்" (1 யோவா. 4 : 1-3) எரே 14 : 14 தேவனுடைய மக்களை தவறாக வழிநடத்தும் பல கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறார் (மத். 24 : 24).

*"ஒரு போதகன் போதிக்கப்பட்ட வேத வாக்கியங்களை எடுத்து போதித்தால் போதுமானது.* *(1 பேது. 4 : 11)*

***– Selected***


## ஜெபியுங்கள்

1. இம்மாதம் 15ம் தேதி வைகை அணையில் நடைபெறும் கூட்டத்திற்காக
2. இலங்கை சமாதானத்திற்காக
3. போஸ்டல் ரிஜீஸ்ட்ரேஷன் கிடைத்ததற்காக தேவனுக்கு நன்றி சொல்லி

# ஒரு வழி


## *God's Promises of A new covenant and Law*

## ஒரு புதிய உடன்படிக்கை மற்றும் கற்பனையில் தேவனுடைய வாக்குதத்தங்கள்




### பாடம் 13


பூமியில் மனிதனுக்கு தேவன் எழுதப்பட்ட கட்டளையை கொடுப்பதற்கு முன், அவர் நேரடியாக ஜாதிகளின் பிதாக்களோடு பேசினார். அவருடைய சித்தம், பரம்பியிருக்கிற முழு குடும்பத்துக்கும் கற்றுக் கொடுக்கப்படும் பொருட்டு அவர் தனது கட்டளைகளை இந்த பிதாக்களுக்கு (எபி. *1 : 1*) திருவுளம் பற்றினார். இப்பிதாக்களில் ஒருவர் ஆபிரகாம். அச்சமயத்தில் உலகத்தில் அனைத்து விசுவாச பிதாக்களில் ஆபிரகாம் தேவனுடைய தெரிந்கொள்ளுதலாய் இருந்து, அவர் அவன் மூலமாய் இவ்வுலகத்தினுள் வித்தை கொண்டு வருவேன் என ஆதாம் ஏவாளுக்கு முதன் முதலில் பண்ணின வாக்குத்தத்தை நிறைவேற்றினார் (ஆதி : *3 : 15*) இந்த வாக்குத்தத்தின் நிறைவேறுதலானது சகல மனுக்குலத்திற்கும் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தைக் கொண்டு வந்தது. இஸ்ரவேலருக்குள்ளும் ஆபிரகாம் மூலமாய் உலகத்தினுள் பிரவேசிக்கப் போகிற அந்த வித்திற்கு வழியை ஆயத்தப்படுத்தும்படிக்கு ஆபிரகாமை தேவன் தெரிந்து கொண்டார். "உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி *12 : 3*) என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார்.




ஆபிரகாமுக்கு தான் நிறைவேற்றப் போகிற வாக்குத்தத்தைக் குறித்து கர்த்தர் இவ்விதமாக ஆபிரகாமோடு ஒரு தனிப்பட்ட உடன்படிக்கையை ஏற்படுத்தினார். வாக்குத்தத்தை ஏற்படுத்திய பின்பு வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கு கிட்டத்தட்ட 2000 ஆண்டுகள் ஆனது. மனுக்குலத்தின் ஒரு பகுதியை இந்த ஆசீர்வாத வித்தின் மூலம் காக்கபடும்படிக்கு, கர்த்தர் ஆபிரகாமின் முற்பிதாக்களாகிய ஈசாக்கையும், யாக்கோபையும், ஒரு தேசத்தையும், இஸ்ரவேல் சந்ததியையும், ஏற்படுத்துவதற்கு தெரிந்து கொண்டார் (ஆதி *12 : 1-3, 15 : 5*).

கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து கொண்டு வந்த போது ஒரு ஜாதியாக அவர்களோடு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இந்த உடன்படிக்கையின் கட்டளை உடன்படிக்கையை கைக்கொள்ளுவதற்கு ஒரு நிபந்தனை போல் கொடுக்கப்பட்டது. ஆனபடியினால் உடன்படிக்கையைக் கைக்கொள்ளுவதற்கு அவர்களுடைய நிபந்தனையாயிருக்கும்படிக்கு பழைய ஏற்பாடு விசேஷமாக இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. (யாத் 24 : 1-4) மோசே இஸ்ரவேலரிடம் அந்த உடன் படிக்கையைக் கர்த்தர் நம்முடைய பிதாக்களுடன் பண்ணாமல், இந்நாளில் இங்கே உயிரோடிருக்கிற நம்மெல்லாரோடும் பண்ணினார் (உபா 5 : 3) என்று கூறினான்.

இவ்வுடன்படிக்கையின் கட்டளையைக் குறித்து, கர்த்தர் இஸ்ரவேலருக்கு "இஸ்ரவேலரே, நீங்கள் பிழைத்திருக்கும்படிக்கும், உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குக் கொடுக்கிற தேசத்தில் நீங்கள் பிரவேசித்து அதைச் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கும், நீங்கள் கைக் கொள்ளுவதற்கு நான் உங்களுக்குப் போதிக்கிற கட்டளைகளையும் நியாயங்களையும் கேளுங்கள். **"நான் உங்களுக்குக் கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளும்படி, நான் உங்களுக்குக் கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் குறைக்கவும் வேண்டாம்"** (உபா. 4 :1, 2) எனக் கூறினார்.




தேவன் சீனாய் மலையிலே மோசேயின் மூலம் இஸ்ரவேலருக்கு எழுதப்பட்ட கட்டளையை கொடுக்கும் வரை எல்லா மனிதரும் ஜாதிகளின் பிதாக்கள் மூலம் தேவன் கொடுத்த அவருடைய நியமங்களின் கீழ் இருந்தனர். சீனாய் மலைக்குப் பிறகு இஸ்ரவேல் தேசத்தார் தேவன் அவர்களோடு விசேஷித்த விதத்தில் ஏற்படுத்திய தேவனுடைய உடன்படிக்கையைக் கைகொள்ளும்படியான நிபந்தனையான கட்டளையாகிய ஒரு வித்தியாசமான கட்டளையின் கீழ் வந்தார்கள் (உபா.5 :1-5) அன்றியும், புறஜாதியார் சிருஷ்டிப்பின் முதலாய் உருவாக்கப்பட்டிருந்த பேசப்பட்ட கட்டளைகளுக்குக் கீழாக நிலைத்திருந்தனர். (ரோம. 2: 14, 15)

## புதிய உடன்படிக்கைக்கும் கட்டளைக்கும் காத்திருத்தல்

ஏரேமியா 31ல் தேவன் ஒரு புதிய உடன்படிக்கை வருமென வாக்குப் பண்ணினார். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரவேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன்" (எரே. 31 : 31) ஏரேமியா மூலம் உருவாக்கப்பட்டிருந்த இந்த புதிய உடன்படிக்கைகளின் வாக்குத்தத்தமானது பல நூற்றாண்டுகளுக்கப்புறம் கிறிஸ்துவின் மூலம் தேவன் அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும் அனைவருக்கும் ஏற்படுத்தியிருந்த புதிய உடன்படிக்கையானது நிறைவேற்றப்பட்டது.

ஏரேமியா 31ல் குறிப்பிடப்பட்டுள்ளவை புதிய ஏற்பாட்டில் எபிரேயர் 8ல் உள்ளது. இது எபிரேயர் 8ன் பகுதியில் எபிரேய எழுத்தாளர் பழையவை எடுக்கப்பட்டு இப்போது புது உடன்படிக்கையின் கீழ்கிறிஸ்தவர்கள் இருக்கின்றனர் என உறுதிப்படுத்துகிறார். வேதாகமம், "இவரோ (இயேசு) விசேஷித்த வாக்குத்தத்தங்களின் பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்" (எபி. 8 : 6) எனக் கூறுகிறது.

முதலாம் உடன்படிக்கையும் கட்டளையும், இஸ்ரவேலருக்கு மட்டுமே. ஆயினும் மனிதனுடைய வழக்கமான பிரச்சனையினால் எப்படியோ இஸ்ரவேலரால் இந்த உடன்படிக்கையின் நிபந்தனைகளை சரியாகக் கைக்கொள்ள முடியவில்லை **எல்லாரும் பாவஞ்செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்.** (ரோம 3 : 23) ஆனபடியினால், வேதாகமம், அந்த முதலாம் உடன்படிக்கை பிழையில்லாதிருந்ததனால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் தேட வேண்டுவதில்லையே. அவைகளில் பிழையைக் காண்கின்றபடியினால், அவர்களை நோக்கி இதோ, கர்த்தர் சொல்லுகிறதென்னவெனில் : நான் புது உடன்படிக்கையை ஏற்படுத்துங் காலம் வருகிறது" (எபி. 8 : 7, 8) எனக் கூறுகிறது.

இப்போது நாம் தேவனோடு புதிய உடன்படிக்கையின் ஐக்கியத்தின் நாட்களில் இருக்கின்றோம். இஸ்ரவேலோடு பண்ணின பழைய உடன்படிக்கையும் கட்டளையும் உருவழிந்து போனது (எபி. 8 : 13) புது உடன்படிக்கையின் கீழ் நாம் புது நிலையில் இருக்கின்றோம். ஒரு புது உடன்படிக்கை உண்டு. இந்த புது கட்டளையையே வேதாகமாகம், "சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப் பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக் 1 : 25).

**தற்சோதனை :**

1. _____ உலக வரலாற்றில் யாருக்கு தேவன் முதலில் தன்னுடைய கட்டளைகளைக் கொடுத்தார்? (A) ஆசாரியர்களுக்கு (B) பிதாக்களுக்கு (C) வேலைக்காரர்களுக்கு
2. _____ உலக ஜாதிகள் ஆபிரகாமுக்குக் கொடுத்த வாக்குத்தத்தின் விளைவாக எதை பெறுவார்கள்? (A) ஆசீர்வாதத்தை (B) நன்மையை (C) விசுவாசத்தை
3. _____ யாருக்கு பழைய ஏற்பாட்டு கட்டளை கொடுக்கப்பட்டது? (A) எல்லாருக்கும் (B) புறஜாதியாருக்கு (C) இஸ்ரவேலருக்கு மட்டும்
4. _____ உபாகமம் 5ல் தேவன் யாருடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார்? (A) புறஜாதியாரோடு (B) ஆபிரகாமோடு (C) இஸ்ரவேலரோடு
5. _____ ஏன் இஸ்ரவேலரால் பழைய உடன்படிக்கையைக் கைக் கொள்ள முடியவில்லை? (A) ஏனெனில் எல்லோரும் பாவஞ் செய்தனர் (B) அந்த உடன்படிக்கை குறைவுள்ளவை (C) உடன்படிக்கையின் கட்டளை குறைவுள்ளவை
6. _____ கிறிஸ்தவர்கள் இப்போது நிறைவான கட்டளையினுடைய .............. ன் கீழ் உள்ளனர்? (A) விசுவாசம் (B) நம்பிக்கை (C) சுயாதீனம்

**ஆம் / இல்லை :** நீ இரட்சிக்கப்பட்டிருக்கும்படி, கிறிஸ்வுடன் கூட உடன்படிக்கையின் ஐக்கியத்திற்குள் வரும்படிக்கு தேவன் கட்டளையிட்டிருக்கிறவற்றை நீ கண்டிப்பாய் செய்ய வேண்டுமா?

**வேதவாசிப்பு : ஆதி. 12 : 1–3; 18 : 17–19; 22 : 15–18; கலா 3 : 15–18;**

**வேத ஆராய்ச்சி : உடன்படிக்கை & கட்டளை : ஆபிரகாமுடன் – ஆதி : 15:18, இஸ்ரவேலருடன் – யாத் 19 : 4–6 ; 24 : 8; 31 : 16; உபா. 4 : 13 ; 5 : 1–5; 1 நாளா 15 : 16; நெகே. 8 : 1; மல். 4 : 4; ரோம. 3 : 1, 2 தேவனுடைய பிள்ளைகள் எல்லோருடன் – எரே. 31 : 31–34 ; எபி. 8 : 1–13 ; 10 : 11–25; 12 : 24; 13 : 20, கட்டளைக்கு குறிப்புகள் : நெகே. ச : 1, 18; 9 : 13, 14; லூக் : 2. 22 – 24 ; யோவா. 1 : 17 ; 3 : 9–19 ; 7 : 19 ; 10 : 34 ; 12 : 34 ; 15 : 25; ரோம. 3: 9–19 ; 7 : 1–7**

## வேத அறிவுப் போட்டி எண் 12ன் விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தீர்க்காயுசைப் | - | நீதி. 28 : 16 |
| 2. | யாக்கோபு | - | ஓசி. 12 : 3 |
| 3. | கர்த்தருடையது ஆளுகிறவர் | - | சங். 22 : 28 |
| 4. | நீதிக்குரிய | - | ரோ. 6 : 13 |
| 5. | தேவனே | - | 1 கொ. 5 : 13 |
| 6. | பவுல் | - | கலா. 2 : 3 |
| 7. | மீறுதலுக்கு | - | 1 தீமோ. 2 : 14 |
| 8. | மனுஷகுமாரன் | - | மத் 24 : 37 |
| 9. | யாக்கோபு | - | ஆதி. 35 : 2 |
| 10. | உத்தமன் | - | பிர. 7 : 8 |

*கடந்த மாதம் 3வது வாசகர் கருத்தரங்கம் ஈரோடு கிறிஸ்துவின் சபையாரின் ஒத்துழைப்போடு இனிதே நடைபெற்றது. கலந்து கொண்ட யாவருக்கும் வாழ்த்துக்கள்*

# 100 தீர்க்கதரிசிகளை பராமரித்த ஒபதியா

**B. அர்ஜுனன்**

## சிறுவர் பகுதி

**வேதபகுதி : 1 இரா. 18:1 – 16**

சமாரியா நாட்டிலே கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் எலியாதீர்க்கதரிசியை அழைத்து உன்னை ராஜவாகிய ஆகாபுக்கு காண்பி நான் தேசத்தின் மேல் மழையை கட்டளையிடுவேன் என்றார். அந்த சமயத்தில் ஆகாப் தன் அரமனை விசாரிப்புகாரனாக இருந்த ஒபதியாவை அழைத்து நீ தேசத்திலிருக்கிற எல்லா நீரூற்றுகளிடத்திலும், எல்லா ஆறுகளிடத்திலும் போ, நாம் சகல மிருகஜீவன்களையும் சாகக் கொடாமல் குதிரைகளையும் கோவேறு கழுதைகளையுமாவது உயிரோடே காப்பாற்றும்படிக்கு நமக்கு புல் அகப்படுமா என்று பார் என்றான். அந்தப்படியே தேசத்தை சுற்றிப் பார்க்கும்படி ஆகாப் ஒரு வழியாகவும், ஒபதியா வேறொரு வழியாகவும் பேனார்கள்.



ஒபதியா போகும் வழியில் எலியாவை சந்தித்தான். எலியா ஒபதியாவைப் பார்த்து நீ போய் இதோ, எலியா வந்திருக்கிறான் என்று உன் ஆண்டவனாகிய ஆகாபுக்குச் சொல் என்றான். அதற்கு ஒபதியா ஆகாப் என்னைக் கொன்று போடும் படிக்கு நீர் உமது அடியானை அவன் கையில் ஒப்புக் கொடுக்க நான் என்ன பாவம் செய்தேன். உம்மைத் தேடும்படி என் ஆண்டவன் அனுப்பாத ஜாதியும், ராஜ்யமும் இல்லை. நீ என்னடானா! இதோ எலியா வந்திருக்கிறான் என்று என்னை சொல்லச் சொல்கிறீரே.

நான் உம்மை விட்டுப் போனவுடனே என்ன நடக்கும் எனக்கென்ன தெரியாதா! கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டு போவார். நான் ஆகாபினிடத்தில் அறிவித்த பின்பு உம்மை காணாவிட்டால் என்னைக் கொன்று போடுவானே, உமது அடியானாகிய **நான் சிறுவயது முதல் கர்த்தருக்கு பயந்து நடக்கிறவன்.** யேசபேல் கர்த்தரின் தீர்க்கதரிசிகளைக் கொன்றுபோடுகிறபோது நான் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளில் நூறுபேரை ஒவ்வொரு கெபியிலும் ஐம்பது, ஐம்பதுபேராக ஒளித்து வைத்து அவர்களுக்கு அப்பமும், தண்ணீரும் கொடுத்து பராமரித்து வந்தேன். நீரோவென்றால் இதோ, எலியா வந்திருக்கிறான் என்று ஆகாபிடம் சொல்லச் சொல்கிறீரே அவனோ உம்மை தேடிக் கொண்டிருக்கிறான் என்றான். பின்பு எலியா இன்றைக்கு என்னை அவனுக்கு காண்பிப்பேன் என்றான். அப்பொழுது ஒபதியா சென்று அதை ஆகாபுக்கு அறிவித்தான். ஆகாப் எலியாவை சந்திக்கப் போனான்.

அன்பான தம்பி தங்கைகளே தன் சிறு வயது முதல் கர்த்தருக்கு பயந்து நடந்த ஒபதியாவை பற்றி தெரிந்து கொண்டீர்கள். அவன் ராஜ அரண்மனையில் வேலை பார்த்தாலும் தன் தேவனுக்கு பயந்து ஜீவித்து பொல்லாத மக்கள் கர்த்தருடைய தீர்க்கதரிசிகளை கொலை செய்து போடும் போது அவன் 100 தீர்க்கதரிசிகளை ஒளித்து வைத்து எப்படி பராமரித்தான் பார்த்தீர்களா? அப்பொழுது சமாரியாவிலே கொடிய பஞ்சம்! இவனோ, தீர்க்கதரிசிகளுக்கு அப்பமும், தண்ணீரும் கொடுத்து கெபியில் வைத்து பராமரித்தான். இவன் செய்த காரியம் ராஜாவுக்கு தெரியவந்தால் என்னவாகும். இவனை கொன்று போடுவார்கள் என்பதும் இவனுக்குத் தெரியும். அப்படியிருந்தும் இவன் தேவனுக்கு பயப்பட்டபடியால் தன் ஜீவனையும் பொருட்படுத்தாமல் தீர்க்கதரிசிகளை காத்தான். நீங்களும் இந்த ஒபதியாவைப்போல் சிறுவயது முதல் ஞாயிறு பள்ளிக்கு சென்று கர்த்தருக்கு பயப்படுகிற பயத்திலே வளர்ந்தால் இந்த ஒபதியாவைப் போல தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.



வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்

**மனப்பாட வசனம் :**

“ சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” இயேசு (மத்தேயு 10 : 42)

“கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்” (நீதி மொழிகள் 1:7)

## வேத அறிவுப்போட்டி எண் 12ல் வெற்றிபெற்றவர்கள்

1. J. நிர்மலாஜான் - மதுரை
2. S. லலிதா பிரேமகுமாரி - மதுரை
3. K.செல்வராஜ் - அத்திப்பாளையம்
4. S. ஆனந்தராஜ் - சூரம்பட்டி
5. P. அலிஸ்மேரியம்மாள் - வத்தலக்குண்டு
6. R. பெரியசாமி - சேளூர் சாணார்பாளைம்
7. V. சிவக்குமார் - செட்டிபாளையம்
8. A. மேரியம்மாள் - மதுரை
9. N. கமலவேணி - சென்னை
10. M. ரோஸ்மேரி - சென்னை
11. S. சாமுவேல் - ஆதிரெட்டிபாளையம்
12. A. ஜோதிகாந்தம் - போடபாறை
13. Mrs. கிரேஸ்லூயிஸ் - நிலக்கோட்டை

***ஆகஸ்ட் 2000 முதல் ஜூலை 2001 வரை நடைபெற்ற வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்ட யாவருக்கும் ஆண்டவரின் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்***

# உலகத்தால் கறைபடியாத உண்மையான அழகு

**பெண்கள் பகுதி**



நவீன உலகில் வாழ்கின்ற மக்களுக்கு. இன்று 'நீதி, நியாயம், அறம், நல்நடத்தை' ஆகிய நற்பண்புகள் கேலிப்பேச்சாக மாறிவிட்டது! இது இன்று நாம் வாழும் இந்தியாவிலும் சரி, பாபிலோன், ரோம் சாம்ராஜ்யங்கள் இவ்வுலகத்தை ஆண்டபோதிலும் சரி, 'அநீதி அநியாயம்' ஆகிய இவைகள் வேடிக்கையாக மாறிவிட்டது! ஆனால் அருமை சகோதரியே, நீதி - நியாயம் இவைகளை கடைபிடிப்பதில் நாம் தவறுவோமேயானால், சமுதாயம் தடுமாறும்! சமுதாயம் தடுமாறினால், நாடு சீர்குலைந்துவிடும்! பாபிலோன் பேரரசுக்கு ஏற்பட்ட பரிதாபம் எதனால் ஏற்பட்டது? உலகத்தை அடிமையாக ஆண்ட ரோம சாம்ராஜ்யம் ஏன் அழிந்தது? நீதியையும், நியாயத்தையும் அவமதித்ததால், இன்று இவைகள் நமக்கு சரித்திரமாக மாறிவிட்டது!

இன்றைய சமுதாயத்தின் புதிய தலைமுறைக்கு பாவம் என்ற வார்த்தை கவர்ச்சியான வார்த்தையாக மாறிவிட்டது. செய்தித்தாளில் வெளிவரும் புதியப்புதிய சினிமா விளம்பரங்கள், டெலிவிஷன் மற்றும் வேறு இடங்களில் காட்டப்படும் திரைப்படங்கள் இவைகளுக்கு சாட்சி!

இன்று நம்முடைய குடும்பங்களில், ஏன் சமாதானம் இலலை, பிள்ளைகள் ஏன் அனாதையாக விடுதிகளில் தங்கியிருக்கிறார்கள்? நாட்டில் பெண்களுக்கு ஏற்படும் அவலநிலைக்கும், பாதுகாப்பின்மைக்கும் காரணம் என்ன? கொலை, கொள்ளை ஏன் அதிகரித்து விட்டது? மதிப்பில் பெரியவர் வயதில் சிறியவர் என்ற வித்தியாசம் காணப்படாமற் போனதின்காரணம் என்ன? ஒரே ஒரு காரணம் தான், இவை அனைத்திற்கும் கூறமுடியும். நீதி, நியாயம் இவ்வைகளுக்கு இன்று மதிப்பு இல்லை! ஆகையால் அக்கிரமம் பெருகின்றது! எங்கும் குழப்பம் அதிகமாகிவிட்டது!

இன்றைய சமுதாயத்தில் அறம் செய்பவர்களுக்கு, நீதியை போதிப்பவர்களுக்கு, அன்பை கடைபிடிப்பவர்களுக்கு இடமில்லை! ஆனால் கொலை, கொள்ளைக்காரர்கள் இன்றைய சமுதாயத்தை பயமுறுத்திக் கொண்டிருக்கின்றனர். நம்முடைய சமுதாயமோ அவர்களுக்கு மாலை சூட்டி, உற்சாகப்படுத்திக் கொண்டுள்ளது! என்ன வெட்கக்கேடு!

**I இவ்வுலகத்தால் மாசுப்படாமல் காத்துக்கொள்ள வேண்டும்.**

நம்முடைய ஆத்துமாக்களை இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினால் கழுவின நாம், "அவர்கள் (உலகம்) நடுவில் இருந்து, பிரிந்து போய்" (2 கொரி. 6 : 17), "இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம்

தரியாமல்" (ரோம் 12 : 2) வாழ முயல வேண்டும். அதுமட்டுமல்ல, தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய ஆத்துமாக்களை, "கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல்" (எபே 5 : 27) காத்து, நித்திய ஜீவனை எந்த சமயத்திலும் சுதந்தரித்துக் கொள்ள ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

ஆனால், இவைகளை எப்படி நடைமுறையில் கொண்டுவருவது? பிரியமான சகோதரியே! நமக்கு மிகப்பெரிய சோதனைகள் வரலாம்! ஆனால், அவைகளிலும் நாம் வெற்றிக்கொள்ள தேவன் ஒரு போக்கை நமக்கு உண்டு பண்ணுவார். யோசேப்பை பாருங்கள் ; தன்னுடைய கற்பை அவன் காத்துக் கொள்ளவில்லையா? அவர்களால் செய்ய முடிந்ததை, நாமும் செய்யலாமே! ஆலோசனை ஒன்று கூறட்டுமா? நோவாவும் அவன் மனைவியும், தங்களுடைய பிள்ளைகளை கொடுமை நிறைந்த இந்த உலகத்தில் தேவ பக்தியாய் வாழும்படி என்ன போதித்திருப்பார்கள் என்பதை விசாரித்தும் பாருங்களேன்!

## *II தேவன் ஏன் இவ்வுலகத்தின் போக்கின்படி நாம் வாழுவதை அனுமதிக்கவில்லை?*

'அவர் கொடுமைக்காரர், தம்முடைய பிள்ளைகள் உலகத்தில் மகிழ்ச்சியாய் வாழ்வதைக் காண அவருக்கு பொறுக்கவில்லை' என்று கூறலாமா? இல்லை சகோதரியே! தேவன் 'மிகவும் அன்புள்ளவர்', 'மிகவும் இரக்கமுள்ளவர்'. நாம் இவ்வுலகத்தில் பிறந்தது முதல், நாம் மரித்த பின்பும், நமக்கு நல்லதைக் கொடுக்கவே தேவன் விரும்புகிறார். ஆனால் எப்படி நம்முடைய பிள்ளைகளுக்கு நன்மையானவைகளை கொடுக்க நாம் விரும்புகிறோமோ, அதுபோல தேவனும், நமக்கு நன்மையானவைகளை கொடுக்க அறிந்திருக்கின்றார். நாம் சந்தோஷமாய் வாழவும், மகிழ்ச்சியுடன் என்றென்றும் இருக்கவும், நாம் எதைச் செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதை தேவனே நிர்ணயிக்கிறார்.

1) 'பாவம் எப்பொழுதும் துக்கத்தை கொடுக்கின்றது' இதற்கு வேதாகமத்தில் இருந்தும், இவ்வுலகத்தில் இருந்தும், அநேக சான்றுகளை நாம் கூறலாம். ஆதாம் பாவம் செய்தவுடன், 'பாவத்தின் முதற்கனி பயம்' என்பதை புரிந்து கொண்டான் (ஆதி. 3 : 9,10). பாவிகள், "பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங். 73 : 19) சாத்தான் ஒருவரை, பாவம் செய்ய தூண்டவும் அறிந்திருக்கின்றான் ; அதன் பின்பு, அவன் பாவம் செய்ததின் காரணத்தை நியாயப்படுத்த சாக்குபோக்கு சொல்லி உற்சாகப்படுத்த அறிந்திருக்கின்றான். ஆனாலும், அவனால் அந்த பாவத்தில், மகிழ்ச்சியாய் இருக்க வழிசொல்ல அவனுக்கு தெரியாது! அப்படிப் போலவே, நாம் வாழ்ந்த கொண்டிருக்கின்ற இந்த உலகம் கூட, நாம் மகிழ்ச்சியாய் இருப்பதற்கு வழி சொல்வதில்லை.

2) 'எந்தப் பாவமும் பரலோகத்தில் பிரவேசிப்பதில்லை' (வெளி. 21 : 27) தேவன், தம்முடைய அநாதி ஆலோசனையின்படி, அவருடைய

பரிசுத்த பிள்ளைகள் இயேசுக்கிறிஸ்துவைப் போல, பரலோகத்தின் மகிமையை ருசிப்பார்க்க வேண்டும் என திட்டம் பண்ணினார். ஆகவே, தம்முடைய குமாரனின் சாயலில் நடக்க நம்மை கட்டாயப்படுத்துகின்றார் ; சகல பாவங்களையும், வெறுத்து நடக்குமாறு கட்டாயப்படுத்துகிறார். உலகத்தால் நம்மைக் கறைப்படுத்திக் கொள்வது அவருக்கு பிரியமாக இருக்கவில்லை! ஏனெனில் அது பாவம்! பாவம், பரலோகத்தில் அனுமதிக்கப்படுவதில்லையே!

3) 'நாம் எதை விதைக்கிறோமோ, அதையே அறுப்போம்' என்பது தேவனுடைய இயற்கை நியதி. அதை மாற்ற யாராலும் கூடாது (கலா 6 : 7, 8 ; யோபு 4 : 8). இது இயற்கைக்கு மட்டும் பொருந்தாது; நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கும் பொருந்தும். நமக்கு நன்மை உண்டாகவும் இந்த சட்டத்தை பயன்படுத்தலாம். நம்மை அழிப்பதற்காகவும் இதைப் பயன்படுத்லாம்! தேவன் நம்மேல், அதிக அன்புள்ளவராய் இருக்கிறபடியினால், அவருடைய பிள்ளைகள், இவ்வுலகத்தினால் கவலைகளை அறுப்பவர்களாக இருப்பது, அவருக்கு பிரியமில்லை! ஆனால், இவ்வுலகத்தின் போக்கின்படி வாழ்கிறவர்கள், தங்களை இவ்வுலகத்தால் கறைப்படுத்தி, "காற்றை விதைத்து, சூறைக்காற்றை அறுப்பார்கள்" (ஓசி 8 : 7).

4) 'லௌகீக சிந்தனை உள்ளவர்கள் மதிகேடர்கள்' அநேகர், ஏசாவைப் போல, தனக்கு சுதந்திரமாக அளிக்கப்பட்ட தனக்கே சொந்தமான ஆசீர்வாதங்களை, அசட்டை பண்ணி, அதை அவமதித்து, தங்களுக்கு ஆபத்தை வருவித்துக் கொள்கிறார்கள். ஏசாவுக்கு, தன்னுடைய ஆசீர்வாதத்தைக் காட்டிலும் யாக்கோபின், 'பயிற்றங்கூழ்' மேன்மையாக இருந்தது. அதைப் போல, பெல்ஷாத்சாருக்கு, தேவனுடைய எச்சரிப்பு அவனை மயக்கும் மதுரமான திராட்சை இரசத்திற்கு முன்பாக, பைத்தியமாகக் காணப்பட்டது. ஏனெனில், ஏசாவும், பெல்ஷாத்சாரும், "மூடர்கள்". "மூடர், பாவத்தைக் குறித்து பரியாசம் பண்ணுகிறார்கள்" (நீதி 14 : 9). ஆனால், நாமோ நீதிக்கு பயந்து, தீமைக்கு விலகிருந்து ஞானமுள்ள மக்களாக விளங்க வேண்டும். (நீதி 14 : 16)

5) 'இவ்வுலக ஆசை, ஆன்ம வாழ்க்கையை அழித்துவிடும்' நம்முடைய ஆவிக்குரிய ஜீவன் அழிக்கப்படும் போது, நம்முடைய ஆத்துமா மரித்துவிடும்! சில நொடி ஆசை இச்சைகளுக்காக நம்முடைய விலையேறப்பட்ட ஆத்துமாவை மாய்த்துக் கொள்வது மதியீனம் அல்லவா? நம்முடைய மதியீனத்தினால், நித்திய வாழ்க்கைக்கு தகுதியற்றவர்களாக, மாற்றிக் கொள்வது சரிதானா? ஏனெனில், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துப்போம்".

கிறிஸ்தவ வாழ்க்கையின் வளர்ச்சியும், அதின் முதிர்ச்சியும் "நன்மை தீமை இன்னதென்று பகுத்தறிவதிலேயே" அடங்கியுள்ளது. மேற்கூறிய, பாவங்களை அடையாளம்கண்டு, அவைகளைத் தவிர்ப்பதின் மூலம் நாம் யார்? என்பதை அடையாளம் கண்டுகொள்ள முடியும்!

**– Selected**

ஆதியாகமம் | பழைய ஏற்பாடு புத்தகங்களுக்கு குறிப்புகள் | GENESIS

பொருள் : உலகம் மற்றும் தேவனுடைய மக்களின் துவக்கம்
ஆக்கியோன் : மோசேயென கருதப்படுகிறது
காலம் : 1400 / 1200 கி.மு.

**திட்டவரைக் குறிப்பு :**

A. ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவிதம் 1 : 1 - 2 : 6
B. முதல் மனிதனும் அவனுடைய கீழ்படியாமையும் 2 : 7 - 3 : 24
C. ஆதாமின் வம்சவரலாறு 4 : 1 - 5 : 32
D. நோவா காலத்து ஜலப்பிரளயம் 6 : 1 - 9 : 29
E. பூமி பகுக்கப்படுதல் மற்றும் பாபேல் கோபுரம் 10 : 1 - 11 : 32
F. ஆபிரகாமின் அழைப்பு 12 : 1 - 25 : 8
G. ஈசாக்கு, யாக்கோபை ஆசீர்வதித்தல் 25 : 9 - 27 : 30
H. யாக்கோபு, அவனுடைய சந்ததி எகிப்திலே 27 : 31 - 50 : 26

**சிறப்புச் செய்தி :** தேவனால் நேசிக்கப்பட்ட ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு

**வரலாற்று பின்னணி :**

ஆதியாகமம் எல்லாவற்றுக்கும் ஆரம்ப புத்தகம், பலமார்க்க பிரிவினைகளின் பொய் பிரச்சாரத்திற்கு முடிவு கட்டும் ஆதாரம் மிகுந்த உண்மை சம்பவங்கள். மனிதன் மண்ணினால் உருவாக்கப்பட்டான் (ஆதி 2 : 7). தேவனுடைய திட்டம் " உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதி 3 : 15). நோவா காலத்தில் உலகம் தண்ணீரால் அழிக்கப்பட்டது. அப்பொழுது அவன் செய்த பேழை கொப்பேர் மரத்தால் ஆனது அது இன்றும் ரஷியாவில் உள்ள லெனின் கிராடு மியூஸியத்தில் உள்ளது. அதிக வருடம் உயிரோடு வாழ்ந்த மெத்தூசலா போன்ற ஆதி பிதாக்களை நாம் ஆதியாகம புத்தகத்தில் பார்க்க முடிகிறது. **– Selected**

"பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்" 1 கொ. 9 : 24

**ஆகஸ்ட் 2000 முதல் ஜூலை 2001 வரை**
**நடைபெற்ற வேத அறிவுப்போட்டியில் கலந்து கொண்டு**

முதல் பரிசு பெறுபவர் **A. மேரியம்மாள்** மதுரை

**இவருக்கு தங்க வாக்கியம் பொறிக்கப்பட்ட கடிகாரம் கொடுக்கப்படுகிறது.**

**வேத அறிவுப் போட்டியாளர்கள் சார்பாக**
**இவர்களை வாழ்த்துகிறோம்**

"ஜெயமோ கர்த்தரால் வரும்" நீதி 21 : 31



# நாமகரண கூட்டத்தின் பாவம்

**விரிவுரை – 4**

***By - Rod Rutherford***

முன்னுரை

1. அமெரிக்கா தேசத்தில் மட்டும் ஏறக்குறைய 2,054 பிரிவு சபைகளும் ஆயிரத்துக்கு மேற்பட்ட சபைகள் உலகமெங்கிலும் காணப்படுகின்றன.

2. நாமகரண கூட்டமென்றால் என்ன?

a. ஒரு மத பிரிவு கூட்டத்தார் இவர்களுக்கு வித்தியாசமான பெயர்கள் உண்டு. மற்ற மதக் கூட்டத்தாரை விட்டு வேறுபட்டிருப்பார்கள்.

b. முழு சபையினர் என்று தங்களை அழைத்துக் கொள்ள முடியாது. சபையின் ஒரு பிரிவினர் அல்லது பிரிவு கூட்டத்தார்.

3. எல்லா நாமகரண கூட்டத்தாரும் தங்களைப் பற்றி சொல்லும் போது, நாங்கள் "சபை பாகுபாடற்றவர்கள்" எந்த பிரிவு கூட்டத்தையும் சேர்ந்தவர்களல்ல என்று தங்களை சொல்லிக் கொள்வார்கள் அல்லது அழைத்துக் கொள்வார்கள்.

4. உண்மையான, எந்த நாமகரண கூட்டத்தாரையும் சேராத மெய்யான சபை, கர்த்தருடைய சபை மட்டுமே, இரட்சிக்கப்பட்டவர்களடங்கிய கூட்டம். நாமகரண கூட்டத்தார் உலகில் தோன்றுவதற்கு முன்பே வேதாகமத்தில் இந்த மெய்யான சபையைப் பற்றி வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

## திறனாய்வு

**I வேத வாக்கியங்கள் நாமகரண கூட்டத்தாருக்கு உதவியாயிருக்கிறதா?**

**அ. "இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு". யோவான் 10 : 16**

1. இது புறஜாதிகளைப் பற்றி கூறுகிறது
2. அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே "மேய்ப்பனுமாகும்".

**ஆ. "நாமகரணக் கூட்டங்களெல்லாம், திராட்சை செடியிலுள்ள கொடிகளல்ல". யோவான் 15 : 1 - 7**

1. கிறிஸ்து இங்கு சீஷர்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தார். நாமகரணக் கூட்டத்தாரைப் பற்றியல்ல
2. இங்கு தனிப்பட்ட முறையில் ஒப்பிட்டு பேசுகிறார்.

**இ. "நாமகரண கூட்டத்தாரெல்லாம், சரீரமான சபையின் வெவ்வேறு அங்கங்கள்". 1 கொரி 12 : 12-27**

1. ஒவ்வொரு அங்கத்தினர்களைப் பற்றிதான் வசனம் தெளிவாக பேசுகிறது.
2. இந்த வசனப்பகுதி, ஒருமைப்பாட்டை பற்றி வலியுறுத்துகிறது. பிரிவினையையல்ல.

II வசனமானது நாமகரண கூட்டத்தாரை கண்டனம் செய்கிறது

அ. "மனித பெயர்களை சூட்டிக் கொள்வது தவறு". 1 கொரி 1 : 10-13

ஆ. "கட்சிகள்", பிரிவினைகள், "மார்க்க பேதங்கள்" இவைகளெல்லாம் மாம்சத்தின் கிரியைகளாகும். கலா 5 : 19-21

இ. "கர்த்தருடைய சபை" என்று அழைத்துக் கொள்வதால் இது மார்க்க பேதமாகி விடாது. அப் 24 : 5, 14

III ஒரு நாமகரண கூட்டத்தில் அங்கத்தினராக இல்லாமல் ஒரு சிறந்த கிறிஸ்தவனாக இருக்க முடியுமா ?

அ. கண்டிப்பாக இருக்க முடியும் ஆரம்ப கால கிறிஸ்தவர்கள் அப்படித்தான் இருந்தார்கள். அப் 2 : 47

ஆ. "எத்தியோப்பிய மந்திரி" எந்த சபையைச் சார்ந்தவர்? அப் 8 : 26-39

இ. முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் பின்பற்றின நடைமுறைகளை ஒருவன் பின்பற்றினால் அவர்களைப் போலவே அவன் அந்த சபையில் கர்த்தரால் சேர்த்துக் கொள்ளப்படுவான்.

**முடிவுரை**

1. பரிசுத்த வேதாகமம் + மனித கோட்பாடுகள் ஒருவரை நாமகரண கூட்டத்து அங்கத்தினராக்கும்
2. பரிசுத்த வேதாகமம் மட்டுமே, ஒருவரை கிறிஸ்தவனாக மட்டும் உருவாக்கும்.
3. பரிசுத்த வேதாகமத்திற்கு ஒருவர் கீழ்ப்படிந்தால், அவரை கிறிஸ்தவராக மட்டும் மாற்றும், மேலும் கிறிஸ்துவின் சபையில் ஒரு அங்கத்தினராக்கும்.

**தமிழில் : தானியேல் துரைராஜன்**

**13வது வேத அறிவு போட்டி கேள்விகள் அடுத்த இதழில் வெளிவரும்.**

## நடப்புச் செய்திகள்

1. இந்தியாவின் 310வது ரேடியோ ஸ்டேஷன் கொடைக்கானலில் ஜூலை 1ம் தேதி துவக்கப்பட்டது.
2. 2000ம் ஆண்டின் கணக்குப்படி உலகின் மக்கள் தொகையில் 3.61 கோடி பேர் எய்ட்ஸ் நோயால் தங்கள் வாழ்வினை இழந்து கொண்டிருக்கிறார்கள்.
3. தமிழகத்தின் தற்காலிக கவர்னராக ஆந்திர கவர்னர் ரங்கராஜன் ஜூலை 3ம் தேதி முதல் கூடுதல் பொறுப்பேற்றுள்ளார்
4. பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாராப்புக்கு டில்லியில் 21 குண்டுகள் முழங்க சிவப்புக் கம்பள வரவேற்பு கொடுக்கப்பட்டது.
5. ஓஸ்லோவில் நடந்த பிஸ்லட்கேம்ஸ் போட்டியில் பெண்களுக்கான 100 மீட்டர் ஓட்டத்தில் அமெரிக்காவின் மரியன் ஜோன்ஸ் கலந்து கொண்டு வெற்றி பெற்றார்.

Registered with Registrar of Newspapers for India under No. TNTAM/2000/3629
Postal Registration No. TN/SR-164/2001

Owned and published by B. Arjunan from 17.2.102D/5, Rajan Nagar, Batlagundu - 624 202. and Printed by V.D. Thankachan at Novelty Press, 3. Dhanappa Mudali street, Madurai-625 001. **Editor : B. Arjunan.**


எங்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்க அன்புடன் அழைக்கிறோம்.

ஞாயிறு ஆராதனை : காலை 9.00 மணி
வியாழன் வேதவகுப்பு : மாலை 6.00 மணி



All are Welcome

கிறிஸ்துவின் சபை
17.2.102-D/5, ராஜன் நகர்
வத்தலக்குண்டு – 624 202.
திண்டுக்கல் மாவட்டம்
✆ : (04543) 23278



# HEAR THE VOICE OF TRUTH
## ON RADIO SRILANKA ALL INDIA SERVICE

| LANGUAGE | DAY'S | TIME | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 8.45 p.m 9.00 p.m<br>9.00 p.m 9.15 p.m | Box. 3815<br>New Delhi - 110 049 | SUNNY DAVID |
| TELUGU | Sun,Mon<br>Tue,Thu | 2.00 p.m 2.15 p.m | Box. 80<br>Kakinada - 533 001 | JOSHUA<br>GOOTAM |
| TAMIL | Sunday,<br>Thursday<br>Friday | 6.45 p.m 7.00 p.m<br>5.45 p.m 6.00 p.m<br>5.30 p.m 5.45 p.m | Box. 8405<br>Bangalore - 560 084 | P.R. SWAMY |
| MALAYALAM | Friday | 3.45 p.m 4.00 p.m | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum - 695 034 | P.K. VARGHESE |

Please write to these addresses for Bible Correspondence Course, Magazines and other Christian Literature in Language

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST

Monthly Magazine

FOR FREE DISTRIBUTION ONLY

To

From

**Editor**
**THE WORD OF CHRIST**
Post Box No.5,
Batlagundu-624 202.